Printed Matter

**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only




ஜூன்
29

To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**


Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

TO SERVE THE LORD AND HIS PEOPLE

# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



# திருத்தூதர் நோன்பு (பதிமூன்று நோன்பு)

ஜூன் 16 முதல்
29 வரை

மலர் 21 ஜூன் 2024 இதழ் 5

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.06.2024- 27.06.2024 | Saturday - Thursday | | | Rome |
| 28.06.2024 | Friday | | Clergy Home Blessing | Kaluvanthittai |
| 29.06.2024 | Saturday | | Diocesan Day | Mtm - Cathedral |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 21 ஜூன் 2024 இதழ். 6

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Rev. Fr. Franklin Jose*

*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni Kumari B.*

*PRINTING*

*Santhom Press,*

*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*

*Diocese of Marthandam*



மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை

# இறையழைத்தல் தினம் - 2024

### இறையழைத்தலுக்கான ஆயர் மாமன்ற பணிக்குழு தலைவர் விடுக்கும் சுற்றுமடல்

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, மதிப்புக்குரிய ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, அன்பான இறைமக்களே!*

மலங்கரை கத்தோலிக்க சுறியானி திருச்சபை மே மாதம் 26-ம் நாளை இறையழைத்தல் தினமாக கொண்டாடுகிறது. ஆண்டு வட்டத்தில் மிக சிறந்த திருவிழாக்களுள் ஒன்றான பெந்தேகோஸ்தே திருநாளுக்கு பின்வரும் ஞாயிற்றுக்கிழமையை இறையழைத்தல் தினமாக கொண்டாடுகிறோம். திருச்சபை தொடங்கப்பட்ட நாள் என்ற நிலையில் பெந்தேகோஸ்தே திருவிழாவை திருச்சபையின் பிறப்பு திருநாளாக பார்க்கிறோம். இறையழைத்தல் தினத்தைக் கொண்டாடும் போது ஏராளமான இளைய உள்ளங்கள் தூய ஆவியின் அருளால் இறையழைத்தலுக்கான தூண்டுதலை பெற்றுக்கொள்ள இறைவனை வேண்டுவோம். தூய மரியாவும், திருத்தூதர்களும் தூய ஆவிக்காக பத்து நாள்கள் காத்திருந்ததுப் போல தூய ஆவியின் ஏவுதலால் இறையழைத்தல் பெருகி திருச்சபை வளமைக் காண ஆர்வமுடன் ஜெபிப்போம்.

ஒவ்வொருவரையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக ஒரு இலட்சியத்துக்காக, கடவுள் அழைத்திருக்கிறார் என நம்புகிறோம். கத்தோலிக்க திருச்சபையில் இறையழைத்தல் என்னும் எண்ணம் இந்த நம்பிக்கையில் வேரூன்றியுள்ளது. குருத்துவம், துறவறம் அல்லது குடும்ப வாழ்வு இதில் எதுவாக இருந்தாலும், அதில் கடந்து

வருபவர்களுக்கு கடவுளின் அழைப்பு உண்டென திருச்சபை நம்புகிறது. எனவே, திருச்சபை அதனை ஊக்குவிப்பது தனது கடமையாக கருதி மிகுந்த ஆர்வத்துடன் அதனைச் செய்து வருகிறது.

நமது திருச்சபையில் இறையழைத்தல்களை அவற்றின் வெவ்வேறு வடிவங்களில் மதித்து உற்சாகப்படுத்துகின்ற ஒரு பண்பாடு உருவாக்கப்பட வேண்டும். இது நமது கடமையாக உள்ளது. நமது வாழ்வை இறைத்திட்டத்திற்கு ஏற்ப உருவாக்கம் செய்வதாலும், கடவுளின் திருவுளத்தை அறிந்து தேர்ந்து தெளிந்து பதில் மொழி அளிக்க பிறரை ஊக்குவிப்பதாலும் இக்கடமையை நமக்கு செய்ய முடியும்.

கடவுள் ஒருவரை அன்பு செய்கிறார் என்ற உள்ள உறுதிப்பாடு இறையழைத்தலின் மையமாக உள்ளது. இறையழைத்தலை கடவுளே தொடங்கி வைக்கிறார். ஆண்டவர் இயேசு அர்ப்பண வாழ்வு வாயிலாக தன்னை பின்பற்ற சீடர்களுக்கு அழைப்பு விடுத்தார். தூய பவுலடியாரோடு இணைந்து, “இனி வாழ்வது நானல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்” (கலா 2:20) என்ற கூற நமக்கும் இயலட்டும். நமது திட்டங்களை கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்து இயேசுவிலும், அவரது நற்செய்தியிலும், வாழ்வை மையம் கொள்ளச் செய்து, நமது வாழ்வில் ஒரு புதுப்பயணம் தோன்றச் செய்வோம். “இறையழைத்தல்கள் கடவுளின் அன்பு கொடைகள்” என்கிறார் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட். கடவுளின் அன்பிற்கு நம்மை அர்ப்பணித்து இதயத்தைத் திறந்து வைத்தால் அந்த அன்பின் கனியாக இறையழைத்தல் பிறந்து வளர்கிறது.



“தெரிந்தும், தெரியாமலும் காத்திருக்கும் இதயத்திற்கு கடவுள் தரும் அழைப்பே இறையழைத்தல்” என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். இறையழைத்தல்கள் குறைந்து வருவதைக் கண்டு உங்கள் இதயம் பேரார்வத்துடன் ஜெபிக்க தொடங்க வேண்டும். இறைவாக்கினர் சாமுவேலின் தாய் ஒரு குழந்தைக்காக மன்றாடியே அதே இதய ஆவலுடன் இறையழைத்தலுக்காக இறைவேண்டல் செய்ய உங்களால் இயலுகிறதா? என்று கேள்வி எழுப்புகிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இறையழைத்தல் என்பது இறைவன் மட்டும் அறியும் ஒரு மறைபொருள். அர்ப்பண வாழ்வு என்பது ஒரு உருவாக்கம். குயவன் களிமண்ணினால் ஒரு மண் குடத்தை உருவாக்குவதுப் போல அர்ப்பணம் செய்யும் ஒவ்வொருவரையும் ஆண்டவர் இயேசு உருவாக்கம் செய்கிறார். இறைவனுக்கும் இறைமக்களுக்குமாக பணிவிடைச் செய்ய ஒருவர் தன்னை என்றென்றுமாக அர்ப்பணம் செய்தால் அது அழகானதும், அருளால் நிறைந்ததுமாக மாறுகிறது.

இறையழைத்தலை ஊக்குவிக்கும் போது நாம் கவனிக்க வேண்டிய காரியங்கள்.

**1. ஜெபம் :** குருத்துவ அல்லது துறவற வாழ்வுக்கான இறையழைத்தலின் பின்புலத்தில் யாரோ ஒருவருடைய ஆற்றல் மிக்க ஜெபம் உள்ளது. எனவே தான் ஆண்டவர், “தேவையான வேலையாட்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள் என்றார்” (மத் 9:38). இறைவேண்டலி லிருந்து தான் இறையழைத்தல்கள் பிறக்கின்றன. இறைவேண்டலால் அது நிலைத்து நின்று கனி தருகிறது.

**2. கற்பித்தல் :** எப்படி இறைவேண்டல் செய்ய வேண்டும் என்று இன்றைய இளைய தலைமுறைக்கு கற்ப்பிக்க வேண்டும். எப்படி ஜெபிக்க வேண்டுமென்று இளைய தலைமுறைக்கு கற்பிக்காமல் இருந்தால் இறைவனோடு ஆழ்ந்த உறவு காண, சீடத்துவ நிலைகாண, கடவுள் அவர்களை அழைக்கிறார் என்பதை அவர்களால் ஒருபோதும் உணர முடியாது.

**3. அழைத்தல் :** குருத்துவ அல்லது துறவற அழைத்தலை ஏற்றுக்கொள்ள, இளையோரையும் வளர் இளம் பருவத்தினரையும் அழைக்க வேண்டும். இந்த அழைப்பு அவர்களை அடைய தகுந்த யுத்திகளை நாம் கையாள வேண்டும்.

**4. ஈர்த்தல் :** குருத்துவம் என்ன என்பதை பிறரை ஈர்க்கும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும். இறைமக்கள் சமூகத்திற்கு ஒரு ஆன்மீக தந்தையாவதற்கு விடுக்கும் அழைப்பே குருத்துவம். துறவறம் வாயிலாக ஒரு பெண் தனது வாழ்வை ஒப்பற்ற வகையில் கிறிஸ்துவுடன் ஒன்றித்த நிலைக்கு கொண்டு வருகிறாள். அவளது வாழ்விலும், சேவையிலும், அவளை சந்திப்பவர்களுக்கு ஒரு ஆன்மீக தாயாக மாறுவதற்கான அழைப்பே இது.

**5. அறிவித்தல்:** இல்லங்களிலும், பங்குகளிலும், இறையழைத்தல் ஊக்குவிக்கும் பண்பாடு வேரூன்ற வேண்டுமானால் இறையழைத்தலைக் குறித்து இடைவிடாமல் பேச வேண்டும். ஒரு நபரின் ஆளுமையில் ஒரு குறிப்பிட்ட அளவு வரை அவர் வளர்ந்து வரும் பண்பாடு தாக்கம் செலுத்துகிறது. குடும்பம், கல்வி, ஆசிரியர்கள், நண்பர்கள், ஆலயம், ஊடகங்கள், பொழுதுபோக்குகள், பிற சூழல்கள், இவை யாவற்றிலும் இறையழைத்தலை ஊக்குவிக்கும் சூழலை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.



**6. இறையழைத்தல் ஊக்குவிப்பவர் :** ஒவ்வொருவரும் இறையழைத்தல் ஊக்குவிப்பவராக மாற வேண்டும். திருச்சபையின் வளர்ச்சியில் ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் பொறுப்பு உண்டு. ஒவ்வொருவரும் தங்களுக்கே உரித்தான பாணியில் திருச்சபையின் வளர்ச்சிக்காக செயல்பட வேண்டியது முக்கிய கடமையாக உள்ளது. எனவே, எல்லோரும் இறையழைத்தல் ஊக்குவிப்பவர்களே. திருச்சபை மற்றும் இறையழைத்தல் பெற்றுக்கொள்பவர் ஆகியோரின் நன்மையைக் இலட்சியமாகக் கொண்டு செயல்பட வேண்டும். குழந்தைப் பருவம் முதல் இறையழைத்தல் பற்றிய சிந்தனைகளை குழந்தைகளின் உள்ளங்களில் விதைத்து வளபடுத்தி அதனை ஆன்மீக நிலைக்கு வளரச் செய்வது நமது கடமையாகும். ஒவ்வொருவரும் இறையழைத்தல் ஊக்குனரும் இளைய தலைமுறையினரை நம்பிக்கை வாழ்வுக்கு வழிநடத்துவதில் உடன் பயணிகளுமாக மாற வேண்டும்.

அர்ப்பண வாழ்வுக்கு நாம் பெறும் அழைப்பு இறையருளாக உள்ளது. இத்தகைய வாழ்வு நிலையை தேர்ந்துக் கொள்ள, நம்பிக்கை, இறைவேண்டல், அர்ப்பணம் ஆகியவை தேவை. இயேசு யார் என்றும், அவரது வாழ்வு அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் குறிப்பாக இறையழைத்தல் பெற்றுக் கொள்பவர்களுக்கும் முன்மாதிரியானது என்பதையும் நம்ப வேண்டும். இறைவேண்டலின்றி, இறையழைத்தலுக்கு செவிமடுத்து, இயேசு ஆண்டவரை பின்பற்றும் ஆர்வம் தோன்றுவதில்லை. அர்ப்பண மனநிலையின்றி இறையழைத்தலுக்கு பதில் மொழித்தருவதற்கும், ஆண்டவர் மீது உள்ள அன்பின் பொருட்டு துறத்தல் மனநிலையை அடைவதற்கும் தேவையான பொறுமை உருவாகாது. இந்த மூன்று பண்புகளும்

இறையழைத்தலை விதைப்பதற்கான விளை நிலத்தை தயார் செய்கிறது. தூய அக்குவினா தோமா கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது : "எதாவது ஒரு காரணத்தின் பொருட்டு தோன்றும் பேரன்பும், பேராவலும், வலுப்பெற்று அதன் விளைவாக பிற காரியங்கள் அனைத்தும் ஒரு பகுதிக்கு மாற்றி வைக்கப்படுகின்றது. எனவே, மனித உள்ளங்கள் தெய்வீக காரியங்களின் மீதுள்ள அன்பாலும், ஆர்வத்தாலும் நிறையும் போது ஒருவர் நிறைவுக் காண்கிறார். அதன் விளைவாக கடவுளிடமிருந்து அவரை பின்னுக்கு இழுக்கின்ற அனைத்தையும் அவர் விட்டு விடுகிறார்" (Summa Contra Gentiles, III, c.130) இதுவே அர்பண வாழ்வுக்கு ஒருவரை வழிநடத்தும் உண்மை.

இறையழைத்தலுக்காக நமது குடும்பங்களிலும், பங்குகளிலும் இறைவேண்டல் செய்ய வேண்டுமென்று அன்புடன் நினைவூட்டுகிறேன். ஒரு சிறிய ஜெபத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். "தேவையான வேலையாட்களை அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடும்படி சீடர்களுக்கு அறிவுறுத்திய ஆண்டவரே திருச்சபையின் திருப்பணிகளுக்கும் நற்செய்தி அறிவித்தல் பணிகளுக்குமாக ஆர்வமிக்க குருக்களையும், துறவிகளையும் எங்களுக்கு நீர் வழங்குவதை நினைத்து உம்மை புகழ்கிறோம். நீங்கள் என்னை தேர்ந்தெடுத்திட நான் தான் உங்களை தெர்ந்தெடுப்பேன் என்ற இறைவார்த்தையின் பொருளை உணர்ந்து, உமது அழைப்பிற்கு பதில் மொழி தர இன்றைய இளையோர் தகுதியுடையவர்களாகட்டும். தங்கள் பிள்ளைகளின் இறையழைத்தலை அறிந்து தெளிந்து அவர்களை ஊக்குவிக்க அவர்களின் பெற்றோர்களுக்கு



தூண்டுதலை அளிப்பீராக. ஆண்டவரே உமக்கு திருவுளமானால் எங்கள் குடும்பங்களிலிருந்து குருக்கள் மற்றும் அர்ப்பண திருப்பணிகளுக்காக இளையோரை தேர்ந்தெடுக்க வேண்டுகிறோம். இறையழைத்தல் பெற்றுக்கொண்டு உமக்காக வாழ்வை அர்ப்பணம் செய்த குருக்களையும், துறவிகளையும் காத்து வழிநடத்துவிராக. இறுதியில் நாங்கள் அனைவரும் உமது விண்ணக மாட்சியில் பங்கு பெறுவோமாக. ஆமென். இறையழைத்தலை ஊக்குவிக்கும் பொருட்டு திருச்சபை முழுவதும் நடைபெறும் சிறப்பு முயற்சிகளின் வெற்றிக்காக வேண்டுகிறோம். மலங்கரை கத்தோலிக்க திருச்சபை, இறையழைத்தலால் வளமைகாண தலைமைத் தரும் அதிமேன்மைத் தங்கிய காதோலிக்க பாவாவையும், அதற்காக முழு ஒத்துழைப்பு வழங்குகின்ற ஆயர்களையும், குருக்களையும், இருபால் துறவியரையும், பொதுநிலையினரையும் நன்றியுடன் நினைவுக் கூருகின்றேன்.

கடவுள் தமது ஆசிராலும், அன்பாலும் அருளாலும் நம்மையும் திருச்சபையையும் நிரப்புவாராக. மலங்கரை கத்தோலிக்க திருச்சபை குருத்துவ, துறவற, இறையழைத்தல்களால் செழிப்புறட்டும் என்று உளம் நொந்து ஜெபிப்போம், பெந்தேகோஸ்தே திருவிழாவின் ஆசிர்வாதங்கள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

*இப்படிக்கு,*
ஆண்டவரில் உங்கள் எளிய ஊழியன்

† மேதகு **சாமுவேல் மார் ஐரேனியோஸ்**
தலைவர், இறையழைத்தலுக்கான ஆயர் மாமன்ற பணிக்குழு,
பத்தனம்திட்டை மறைமாவட்ட ஆயர்.

# குருமடச் செய்திகள்

**திருதொண்டர் மற்றும் இளநிலை பட்டங்கள்**

இவ்வருடம் மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்காக எட்டு துணைத்திருத்தொண்டர்கள் 'ம்சம்சோனோ' பட்டம் பெற்றுக் கொண்டு திருத்தொண்டர் நிலைக்கு உயர்த்தபட்டனர். இத்திருத்தொண்டர் பட்ட நிகழ்வுகள் அனைத்தும் மே மாதம் 24 -ஆம் தேதி புனித எப்ரேம் இளங்குருமடத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வில் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி திருத்தொண்டர் பட்டம் வழங்கி ஆசீர்வதித்தார். திருத்தொண்டர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், பங்கிலிருந்து இறைமக்கள் மற்றும் பங்குபேரவை உறுப்பினர்கள் பங்கெடுத்து திருத்தொண்டர்களுக்காக ஜெபித்தனர். பங்குத்தந்தையர்கள், மறைமாவட்ட குருக்கள் மற்றும் அருட்கன்னியர்கள் ஏராளமானோர் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

மேய் மாதம் 23-ஆம் தேதி புனித எப்ரேம் இளங்குருமடத்தில் வைத்து ஆயர் அவர்களின் திருக்கரங்களிலிருந்து உயர்குருத்துவ கல்லூரிகளில் இறையியல் படிக்கின்ற அருட்சகோதார்கள் இளநிலைப் பட்டங்களை பெற்றுக் கொண்டனர். மூன்று பேர் துணைத்திருத்தொண்டர் பட்டத்தையும், ஒருவர் 'ம்சம்ரோனோ கோரியோ' பட்டத்தையும் பெற்றுக் கொண்டனர். இவர்களோடு சேர்ந்து இரண்டு களப்பணியாளர்கள் தங்கள் ஒரு வருடக்கால களப்பணியை முடித்துவிட்டு ஆயர் அவர்களிடமிருந்து குருத்துவ ஆடையை பெற்றுக் கொண்டார்கள். இந்நிகழ்விலும் அருட்சகோதர்களுடைய பெற்றோர்கள், உறவினர்கள், மற்றும் பங்கிலிருந்து இறைமக்கள் மற்றும் பங்குபேரவை உறுப்பினர்கள் பங்கெடுத்து அருட்சகோதர்களுக்காகவும் துணைத்திருத்தொண்டர் களுக்காகவும் ஜெபித்தனர். பங்குத்தந்தையர்கள், மறைமாவட்ட குருக்கள் மற்றும் அருட்கன்னியர்கள் ஏராளமானோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.



**புதிய குருமட அதிபர் பொறுப்பேற்பு**

இளம் குருமட அதிபராக தேவதானப்பட்டி தைநேசி மாதா மறைப்பு தளத்தின் பொறுப்பு வகித்து வந்த அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் அவர்கள் 24/05/2024 அன்று குருமட சிற்றாலயத்தில் வைத்து திருத்தொண்டர் அருட்பொழிவு நிகழ்வுகளின் நிறைவில் மறைமாவட்ட ஆயரிடமிருந்து குருகுல முதல்வர், அருட்தந்தையர்கள், திருத்தொண்டர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் முன்னிலையில் பணிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்

# நற்செய்தி சங்கம்

மரியாகிரி புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் வைத்து களியக்காவிளை மறைவட்ட நற்செய்தி சங்கமானது மே மாதம் 24-ஆம் தேதி காலை 9 மணிக்கு தொடங்கி வைக்கப்பட்டது. இதனை மறைவட்ட முதன்மைக் குரு அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் தொடக்க உரை ஆற்றி தொடங்கி வைத்தார். இதில் மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் நற்செய்தி சங்க தலைவரான மேதகு ஆயர் ஆன்றணி மார் சில்வானோஸ் அவர்கள் நற்செய்தி சங்கத்தை பற்றிய முகவுரையை கொடுத்து வகுப்புகள் எடுத்தார். நமது ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் நற்செய்தி சங்கத்தின் சிறப்பை பற்றி மக்களுக்கு உரையாற்றினார். அதேபோன்று நற்செய்தி சங்கத்தில் இணைந்து செயல் பட்டுக் கொண்டிருக்கின்ற அருள் சகோதரி மேரி பிரசாத் அவர்களும். மார்த்தாண்டம் மறை மாவட்ட நற்செய்தி சங்க இயக்குனர் அருட்தந்தை ஜெபின் ஜாண் அவர்களும் கலந்து கொண்டார்கள். இந்தப் பயிற்சி மறுநாள் 25-ஆம் தேதியும் நடைபெற்றது. இறுதியில் மரியகிரி புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தினுடைய பங்குத்தந்தை அருட்தந்தை வினு குமார் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி இந்த வகுப்பினை நிறைவு செய்தார். இதில் 97 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

# மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன்

மார்த்தாண்டம் மறைமாவட்டம் சார்பாக வருடம்தோறும் நடத்தப்பட்டுவரும் 'மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன்' இந்த ஆண்டும் நடத்தப்பட்டது. மே மாதம் 17-ஆம் தேதி தொடங்கி மே மாதம் 20-ஆம் தேதி வரை மூன்று நாட்களாக நடைபெற்ற இந்த பைபிள் கன்வென்சனில் ஏராளமான மக்கள் இறைவார்த்தை பகிர்வில் பங்கெடுத்து இறையாசிர் பெற்றுக்கொண்டனர். அருட்தந்தை. வர்கீஸ் V.C. அவர்கள் இறைவார்த்தையை பகிர்ந்தளித்தும், மிக ஆழமான இறைசிந்தனைகளை மிக எளிய முறையில் விளக்கி கூறியும், மிக சிறப்பாக மூன்று நாட்களாக நடைபெற்ற கன்வென்சனை ஆன்மீக முறையில் வழிகாட்டினார்கள். பெந்தெகோஸ்தே திருநாளுக்கு ஆயத்தமாக நடைபெற்ற மூன்று நாள் விவிலிய கன்வென்சனில் 'மூவொரு கடவுளையே' மையசிந்தனையாக கொண்டு இறைவார்த்தை பகிரப்பட்டு சிந்தனைக்கு தூண்டப்பட்டது. ஒவ்வொரு நாள் கன்வென்சனும் மாலை ஜெபம் மற்றும் ஜெபமாலையோடு தொடங்கப்பட்டு, தொடர்ச்சியாக ஆண்டவருக்கு புகழ்ப்பாடல்களும், புகழ்ச்சி மன்றட்டுகளும் ஏறெடுக்கப்பட்டு, இறைவார்த்தை பகிரப்பட்டது. இறைவார்த்தை பகிர்விற்கு பின்பு தினமும் நற்கருணை ஆராதனையும் நடைப்பெற்றது. மூன்று நாள்களிலும் திராளான மக்கள் ஒவ்வொரு மறைவட்டங்களிலிருந்து வந்து பங்கெடுத்து இறையாசீர் பெற்றுச் சென்றனர். இந்நிகழ்வில் குருக்கள் மற்றும் அருட்கன்னியர்கள் பங்கெடுத்து சிறப்பித்தார்கள்.



# மேரி மக்கள் துறவற சபை

## முதல் மற்றும் நித்திய வார்த்தைப்பாடு

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாணத்தில் 2024 -ம் ஆண்டிற்கான முதல் மற்றும் நித்திய வார்த்தைப்பாடு நிகழ்வானது 13.05.2024 அன்று மார்த்தாண்டம் மாகாண மேரிமக்கள் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இறைவனுள் தங்களை சமர்ப்பித்த அடையாளமாக அருட்சகோதரி ஷலேரியா அவர்கள், முதல் வார்த்தைப்பாட்டை அருட்சகோதரி லூர்துமேரி DM அருட்சகோதரி ஜெபமாலை மேரி DM மற்றும் அருட்சகோதரி மேக்தலின் மேரி DM ஆகியோர் நித்தியவார்த்தைப்பாட்டையும் பெற்று கொண்டார்கள். இந்நிகழ்வினை மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள் இதில் அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டனர்.

## துறவறவாழ்வின் பொன்விழா மற்றும் வெள்ளிவிழா துவக்கம்

அருட்சகோதரி. சுனிதா, அருட்சகோதரி. ஆனிபோழ், அருட்சகோதரி. பிரசாந்தா, அருட்சகோதரி. தீப்தி ஆகியோர் பொன்விழா ஆண்டையும், அருட்சகோதரி. இம்மானுவேல், அருட்சகோதரி. ஆன்மேரி, அருட்சகோதரி. புஷ்பராணி, அருட்சகோதரி. மேரி பிரபா, அருட்சகோதரி. ஜோபி ஜோர்ஜ் ஆகியோர் வெள்ளிவிழா ஆண்டினையும் துவங்கியிருக்கிறார்கள். இறைவனுக்கு தங்கள் வாழ்க்கையை முழுமையாக அர்பணித்து துறவற வாழ்வு மேற்கொண்டதன் 25 மற்றும் 50 ஆண்டிற்கு காலடி எடுத்து வைத்தற்கு மகிழ்ச்சி நிறைந்த இதயத்தோடு இறைவனுக்கு நன்றி கூறி தங்கள் பொன்விழா மற்றும் வெள்ளிவிழாவினை துவங்கி இருக்கும் அருட்சகோதரிகளுக்கு வாழ்த்துகள்.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை ஜெஸ்டின்
ஜூன் 01



அருட்தந்தை ரெஜின் ரதீஷ்
ஜூன் 09



அருட்தந்தை சுரேஷ் ஆன்றனி
ஜூன் 13



அருட்தந்தை
ஆன்றோ ஜெபின்
ஜூன் 13



அருட்தந்தை
சில்ஜின்
ஜூன் 13



அருட்தந்தை
அபிஷேக் ராஜ்
ஜூன் 13



அருட்தந்தை
ஜோணி ஆல்பர்ட்
ஜூன் 24



அருட்தந்தை
ஜோசப் பத்றோஸ்
ஜூன் 29



அருட்தந்தை
பிபின்
ஜூன் 29



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## ஊக்கப்படுத்துதல் பயிற்சி

04.05.2024 அன்று 9 மற்றும் 11-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கான ஊக்கப்படுத்துதல் பயிற்சி மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. இப்பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்தார்கள். சிறப்பு விருந்தினராக மார்த்தாண்டம் மகளிர் காவல் நிலையத்தின் துணை ஆய்வாளர் திருமதி விஜிகலா அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். தொடர்ந்து St. Paul IAS Academy -யின் பயிற்சி குழுவினர் பயிற்சியை வழங்கினார்கள். இந்த பயிற்சியில் கல்வியின் முக்கியத்துவம், வேலை வாய்ப்பை வழங்கும் பாடத்திட்டங்கள், படிக்கும் வழிமுறைகள் மற்றும் பலவகையான செய்திகள் மற்றும் எடுத்துக்காட்டு மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. காலை 10 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெற்ற இப்பயிற்சியில் 65 மாணவமாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## கோடைகால பயிற்சி முகாம்

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் தளிர்கள் உலகம் திட்டத்தில் 8-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாணவிகளுக்கு மே மாதம் 8, 9 மற்றும் 10 ஆகிய மூன்று நாட்கள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து கோடை கால பயிற்சி முகாம் நடைபெற்றது. மார்த்தாண்டம்

மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ்பிறைட் அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்து மாணவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். தொடர்ந்து மாணவர்களுக்கு மதிப்பீடுகள், யோகா வகுப்புகள், புத்தக வாசிப்பு பயிற்சிகள், விளையாட்டுகள், மருத்துவ ஆலோசனைகள், படிக்கும் வழிமுறைகள், தலைமைத்துவம், ஆன்மீக ஆலோசனைகள் போன்றவை குறித்து இந்த மூன்று நாட்களும் பல்வேறு பயிற்சியாளர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. வாழ்விற்கு தேவையான அடிப்படை பண்புகளை வளர்த்து, தங்களை தாங்களே மெருகூட்டிக் கொள்ளும் விதத்தில் இந்த பயிற்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்த பயிற்சிமுகாமிற்கு வருகை தந்திருந்த மாணவர்கள் தங்களுக்கு இந்த பயிற்சியானது மிகவும் பயனுள்ளதாகவும், சலிப்பு ஏற்படாமல் மிகவும் உற்சாகமாக இருந்ததாகவும் கருத்து தெரிவித்திருந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 25 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்த பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் செய்திருந்தனர்.

## உதவித்திட்டங்கள்

1. 16.05.2024 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக மார்த்தாண்டம் பணி மண்டலத்திற்கு உட்பட்ட 14 சுய உதவி குழுக்களில் உள்ள 56 உறுப்பினர்களுக்கு ரூபாய் 28,00,000/- கடனாக வழங்கப்பட்டது.



2. 10.05.2024 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தில் உள்ள 170 பயனாளிகளுக்கு ரூபாய் 4,25,000/- உதவித்தொகை மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. அன்றைய தினம் திரு. அலோசியஸ் அவர்களால் "நல்ல நிலத்தில் நல்ல கனிகள்" என்னும் தலைப்பில் மாணவர்களின் பெற்றோருக்கு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

## பிறநிகழ்வுகள்

1. 18.04.2024 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் நிதி பரிமாற்றம் குறித்த கணக்குகளை CRS பணியாளர்களான திருமதி கௌசல்யா மற்றும் சஞ்சனா ஆகியோர் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தனர்.
2. 24.04.2024 மற்றும் 25.04.2024 ஆகிய இரு தினங்கள் தமிழக சமூகப்பணி மையம், திருச்சியில் வைத்து நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் கலந்து கொண்டார்கள்.
3. 19.05.2024 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் சார்பாக பங்குவாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சாம்பியன்களுக்கான வழிகாட்டுதல் கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 18 நபர்கள் கலந்து கொண்டனர்.

# MCA
## Diocese of Marthandam

### பொதுநிலையினர் தினக் கொண்டாட்டம்

மலங்கரை கத்தோலிக்க சபை அளவிலான பொதுநிலையினர் தினக் கொண்டாட்டமானது மார் எப்ரேம் வளாகம் குழித்துறையில் வைத்து 12.05.2024 அன்று முற்பகல் 11.00 மணிக்கு மேதகு ஆயர் Dr. வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் திருப்பலியோடு ஆரம்பமானது. மதிய உணவிற்குப்பின் பிற்பகல் 2 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் அவர்கள் MCA கொடியேற்றினார், அருட்தந்தை ஜார்ஜ் தோமஸ் OIC அவர்கள் “மலங்கரை சபையில் பொதுநிலையினரின் தலைமைப்பண்பு” என்ற தலைப்பில் கருத்தரங்கை நடத்தினார். தொடர்ந்து சபை அளவிலான MCA தலைவர் Adv. ஆபிரகாம் பட்டியானி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், அனைத்து செயற்குழு மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக மேதகு ஆயர் ஜோஷ்வா மார் இக்னாத்தியோஸ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வின் இடையே மரியாயின் சேனை, தாய்மார் சங்கம், வின்செண்-டி-பால் உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இவ்விழாவில் Dr. F.S. வில்சன் குழிஞ்ஞான்விளை பங்கைச் சார்ந்த MLA உறுப்பினர் Child Welfare Commission, Govt of Kerala உறுப்பினராக தேர்வு பெற்றமையால் கவுரவிக்கப்பட்டார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை பொதுநிலையினர் பணிக்குழு இயக்குநர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் மற்றும் பொறுப்பாளர்கள் செய்திருந்தனர்.



## மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

2024-’25-ம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று கொண்டு இருக்கிறது.

**இளங்கலை படிப்பான** B.Sc. Biochemistry, Biotechnology. Microbiology, Physics, Mathematics, Chemistry, Geology, Computer Science, B.Com, BBA, BCA, BA English, Psychology, Journalism and Mass communication

**முதுகலை படிப்பான**

**M.Sc. Biochemistry, Biotechnology. Microbiology, Physics, Mathematics, Chemistry, Geology, Computer Science, M.Com., MSW and MA English**

**Ph.D. Biotechnology, Microbiology, Physics, Computer Science, Mathematics, Commerce.**



# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

## வெளி கல்லூரிகளில் கலைவிழா போட்டிகள் (Out Reach Programme)

05.04.24 அன்று மலங்கரை கத்தோலிக்கக் கல்லூரி, மரியாகிரியில் வைத்து நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையேயான கலாச்சார விழாவில் நமது கல்லூரியின் முதலாமாண்டு மாணவர்கள் கலந்துகொண்டு பரிசுகளை வென்றனர். மேலும் ட்ரீனிட்டி கலைவிழா போட்டியானது ஹோலி ட்ரீனிட்டி கல்லூரியில் வைத்து நடைபெற்றது அதிலும் கலந்துகொண்டு பல பரிசுகளை வென்றனர்.

## வளாகத் தேர்வு (Campus Interview)

நமது கல்வியியல் கல்லூரியில் 13.04.24 அன்று வளாகத் தேர்வானது மவுண்ட்பார்க் சீனியர் செகன்டரி பள்ளி, கள்ளக்குறிச்சி. ஆன்லைன் வழியாக வளாகத்தேர்வு நடைபெற்றது இந்த தேர்வில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் பணி நியமனம் செய்யப்பட்டனர். இந்த வளாகத் தேர்வினை ஒருங்கமைத்துத் தந்த கல்லூரி நிர்வாகத்திற்கு மாணவர்கள் அனைவரும் நன்றி தெரிவித்தனர்.

## விளையாட்டு விழா (Sports Meet - 2024)

நமது கல்வியியல் கல்லூரியில் 08.05.24 அன்று காலை விளையாட்டு விழாவானது கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை பெர்னார்டு அவர்கள் தலைமையில், முதல்வர் ஏஞ்சல் பெலிக்ஸ் மற்றும் அருட்தந்தை ஷிஜு ஜோஸ் (கணக்காயர்) அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் திரு. லாரன்ஸ் (விளையாட்டுத் துறைத் தலைவர், நாஞ்சில் கத்தோலிக்கக் கல்லூரி, களியக்காவிளை) அவர்கள் விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவர்கள் பலவிதமான விளையாட்டுப் போட்டிகளில் உற்சாகத்தோடு பங்கேற்று சான்றிதழ்களையும், கோப்பைகளையும், பதக்கங்களையும் வென்றனர். திரு. சகாயதாசன் அவர்கள் போட்டிகளை சிறப்பாக ஒருங்கிணைத்து சிறப்பித்தார்.

## கலைவிழா கலைப்போட்டிகள் (Arts Day Celebration)

நமது கல்வியியல் கல்லூரியில் 13.05.24, 14.05.24, ஆகிய இரண்டு நாட்களில் கலைவிழா கலைப்போட்டிகளானது கல்லூரியின் தாளாளர் தந்தை பெர்னார்டு அவர்கள் தலைமையில், முதல்வர் ஏஞ்சல் பெலிக்ஸ், அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவர்கள் இரண்டு நாட்கள் நடைபெற்ற கலைப் போட்டிகளில் உற்சாகத்தோடு பங்கேற்று கோப்பைகளை வென்றனர். இதன் ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஜான்சிராணி அவர்கள் விழாவினை சிறப்பாக ஒருங்கிணைத்து சிறப்பித்தார்.

## பேராலயக் கட்டுமானபணிக்கான நன்கொடைகள் (மே - 2024)

| S.No. | Name | Amount |
|---|---|---|
| 1. | Mr. Santhosh, Pechiparai | 50,000/- |
| 2. | St. Mary's CBSE School, Mariagiri | 2,00,000/- |

## HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

### குமரி மாவட்ட சிறப்புப்பள்ளி பணியாளர்களின் கூடுகை

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் சுகாதாரப்பணி மையமான ஹோம் பேரியக்கத்தின் கீழ் செயல்படும் ஹோம் அறிவுசார் குறைபாடுடையோருக்கான சிறப்புப்பள்ளியின் வெள்ளி விழா ஆண்டின் செயல்திட்டமாக “ஒன்றிணைந்து வளர்வோம்” குமரி மாவட்ட சிறப்புப்பள்ளி பணியாளர்களுக்கான ஒருநாள் பயிலரங்கம் 13.04.2024 சனிக்கிழமை அன்று ஹோம் சிறப்புப்பள்ளி வளாக மார் எப்ரேம் அரங்கில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வை மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையேற்று துவக்கிவைத்தார். அவர்தம் துவக்கவுரையில் சிறப்புக்குழந்தைகளை அன்போடு கவனிக்கும் சிறப்பாசிரியர்கள் மிகவும் முக மலர்ச்சியுடன் காணப்படுவது இறைவன் கொடுத்த மாபெரும் கொடை எனவும் எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல், நீங்கள் செய்யும் தொண்டிற்கு ஏராளமான ஆசீர்வாதங்கள் உங்கள் குடும்பங்களில் கிடைக்கட்டும் என வாழ்த்தினார்கள். அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் விழா அறிமுகவுரையோடு அனைவரையும் வரவேற்றார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு எஸ் சிவசங்கரன் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். அவர்தம் உரையில் மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழக அரசு செய்திடும் நலத்திட்டங்களை பட்டியலிட்டு மாற்றுத்திறனாளிகளுக்காய் தொண்டாற்றும் பணியாளர்களுக்கும் இன்னும் அதிக பலன்கள் கிடைக்க ஆவனச் செய்யப்படும் என குறிப்பிட்டார். தொடர்ந்து கவுன்சிலரும், சைக்கோதெரபிஸ்ட்டுமான சகோ லாரன்ஸ் அவர்கள் பயிலரங்க முதல் இரு அமர்வுகளை நடத்தினார்கள். தொடர்ந்து இன்பென்ட் நடனப்பள்ளி, இயக்குநர், மாஸ்டர் அருள் அவர்கள் மூன்றாம் அமர்வை வழிநடத்தினார்கள். நிறைவு விழா கூட்டத்தில் மார்த்தாண்ட மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ்பிறைட் அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார்கள். மனநல மருத்துவரும், கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மெடிக்கல் சூப்பிரண்டுமான டாக்டர் அருள்பிரகாஷ் அவர்கள் சிறப்புரை யாற்றினார்கள். தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து சிறப்புப்பள்ளி பணியாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நடைப்பெற்றது. குருகுல முதல்வர் பொன்னாடை அணிவிக்க, டாக்டர் அருள்பிரகாஷ் பாராட்டு சான்றிதழ் வழங்க ஹோம் இயக்குநர்/தாளாளரும் ஆகிய அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கினார்கள். இறுதியாக நாட்டுப்பண் பாடலுடன் பயிலரங்க நிகழ்வு நிறைவுபெற்றது. இப்பயிலரங்கத்தில் 100 க்கும் மேற்பட்ட சிறப்பாசிரியர்கள் கலந்துகொண்டு மகிழ்ந்தனர். ஹோம் சிறப்புப்பள்ளி தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நன்றி கூறினார்கள். சிறப்பாசிரியை திருமதி அஜிதாகுமாரி அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள்.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**ஜூன்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 14, 15 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# ஆயரின் மேய் மாத நிகழ்வுகள்



1 ➢ மூவாற்றுப்புழை மறைமாவட்டத்தில் குன்னிகுறுச்சி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

2 ➢ கருங்கல் தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

3 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் மாகாண இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி குழந்தைகளுக்கு புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

3 ➢ MBOC ஆசிரியர்களுக்கு வகுப்பு எடுத்தார்.

3 ➢ MCA சார்பாக திருவல்லாவில் நடைபெற்ற Light - 2024 கூடுகையில் வகுப்பு எடுத்தார்.

5 ➢ பாத்திமாநகர் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

5 ➢ மாத்தார் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

6 ➢ பொன்னெம்பு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.



7 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற MPDN Ltd. கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

10 ➢ நாவல்காடு பங்கின் உபதேசி அவர்களின் நல்லடக்க திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினார்.

10 ➢ தேனிக்குளம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

11 ➢ Malankara School of Word and Worship -ல் இறையியல் பயில்பவர்களுக்கு வகுப்பு எடுத்தார்.

12 ➢ கிடாரக்குழி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

12 ➢ பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு மேய்ப்புபணி நிலையத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

12 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் மாகாண இல்லத்தில் முதல் வார்த்தைப்பாடு வரவேற்பு திருச்சடங்கை தலைமையேற்று நடத்தி இறையாசீர் பொழிந்தார்.

13 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் மாகாண இல்லத்தில் முதல் வார்த்தைப்பாடு திருச்சடங்கை தலைமையேற்று நடத்தி திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

13 ➢ காதோலிக்கேட் மையத்தில் நடைபெற்ற On Going Formation நிகழ்வை துவங்கி வைத்தார்.

15 ➢ அருமனை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

16 ➢ POC-ல் நடைபெற்ற குருத்துவ பயிற்சி பற்றிய ஆலோசனை கூடுகையில் கலந்துக்கொண்டார்.

17 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் மாகாண இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

17 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற School Board கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

17-19 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட பைபிள் கண்வென்ஷனில் கலந்துக்கொண்டார்.

18 ➢ மாவேலிக்கரையில் வைத்து பெதனி அருட்சகோதரர்களுக்கு இளநிலை மற்றும் திருத்தொண்டர் பட்டங்களை வழங்கினார்.

19 ➢ சேரன்மகாதேவி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

20 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற பள்ளி தலைமையாசிரியர்களின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

20 ➢ அருட்தந்தை யேசுமரியான் அவர்களின் குருத்துவ பொன்விழா நிகழ்வில் கலந்துக்கொண்டார்.

21 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற Diocesan Council கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

21 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற College Board கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

21 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற Unaided School Board கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

22 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற Presbyteral Council கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

23 ➢ இளம் குருமடத்தில் வைத்து அருட்சகோதரர்களுக்கு குருத்துவ ஆடை மற்றும் இளைநிலை பட்டங்களை வழங்கினார்.

24 ➢ இளம் குருமடத்தில் வைத்து அருட்சகோதரர்களுக்கு திருத்தொண்டர் பட்டம் வழங்கினார்.

25 ➢ மரியாகிரி ஆலயத்தில் நடைபெற்ற நற்செய்தி சங்க கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

26 ➢ குழித்துறை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.



## இம்மாதம் நினைவு கூர


ஜூன் 2024

1 – புனித ஜஸ்டின்
2 – பெந்தக்கோஸ்துக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
4 – கீவற்கீஸ் மார் திவன்னசியோஸ் ஆண்டகையின் நினைவு (2019)
5 – புனித போனிபஸ்
7 – திருஇருதய திருநாள் (இலத்தீன் முறை)
8 – புனித மரிய தெரசாள்
9 – பெந்தக்கோஸ்துக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
11 – மார் பர்த்தலமேயு மற்றும் மார் பர்ணபாஸ்
மலங்கரை கத்தோலிக்க திரு ஆட்சி பீடம் நிறுவப்பட்ட நாள் (1932)
திருவனந்தபுரம் மறைமாநிலம் மற்றும்
திருவல்லா மறைமாவட்டம் உதயம் (1932)
13 – பதுவை நகரின் புனித அந்தோணியார்
14 – இறைவாக்கினர் எலிசா
15 – தூய இறைஅன்னையின் பெயரில் முதல் தேவாலயம் நிறுவியதன் நினைவு
16 – பெந்தக்கோஸ்துக்குப்பின் நான்காம் ஞாயிறு
திருத்தூதர் நோன்பு (பதிமூன்று நோன்பு தொடக்கம்)
18 – மார் எஃப்ரேம் மல்பான்
19 – திருத்தூதர் புனித யூதா ததேயு
21 – புனித அலோஷியஸ் கொன்சாகோ
23 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
குருமட தினம்
24 – திருமுழுக்கு யோவானின் பிறப்பு
சேப்பாட்டு பிலிப்போஸ் ரம்பானின் நினைவு
27 – யாக்கோபு மார் தியோஃபிலோஸ் ஆண்டகையின் நினைவு (1956)
28 – புனித ஐரேனியூஸ், சாமுவேல் மார் ஐரேனியூஸ் ஆண்டகையின் பெயர்விழா
29 – திருத்தூதர்களான மார் பேதுரு, மார் பவுல்
திருத்தூதர் நோன்பு நிறைவு
தூய மரியன்னை மலங்கரை குருத்துவக் கல்லூரி நிறுவப்பட்ட நாள் (1989)
யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் மற்றும் யோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகையரின் ஆயர் திருநிலைப்பாடு (1998)
வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பெயர்விழா
30 – பெந்தக்கோஸ்துக்குப்பின் ஆறாம் ஞாயிறு
பன்னிரு திருத்தூதர்கள்

13 

19 

21 

24 

30 

## மார்த்தாண்டம் மறைமாவட்ட பைபிள் கன்வென்ஷன்



## நற்செய்தி சங்கம்





## DM Convent



முதல் மற்றும் நித்திய வார்த்தைப்பாடு



துறவற வாழ்வின் பொன்விழா மற்றும் வெள்ளிவிழா தொடக்கம்

## MIDS



பயிற்சி வகுப்பு

## MCA



பொதுநிலையினர் தின கொண்டாட்டம்

## குருமட செய்திகள்



இளம் குருமட அதிபர் பொறுப்பேற்பு



குருத்துவ ஆடை பெற்ற அருட்சகோதரர்கள்



திருத்தொண்டர் பட்டடம்



குருத்துவ இளநிலை பட்டங்கள்

## HOM



குமரிமாவட்ட சிறப்புப்பள்ளி பணியாளர்களின் கூடுகை

